பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
25 08 2024 **SUNDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநில செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான அடித்தளம் வலுப்பெற்று வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் தொழில் தொடங்க 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் சுழல் நிதியை பிரதமர் இன்று விடுவித்தார்.

3. பூம்புகார் சுற்றுலா மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகள் இரண்டு மாதங்களில் நிறைவு பெறும் என்று மாநில அமைச்சர் திரு. மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் நிகழும் பாலியல் வன்கொடுமை மற்றும் கொலைச் சம்பவங்களுக்கு போதைப்பொருள் புழக்கமே காரணம் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

5. பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்காக 20க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் இன்று புறப்பட்டுச் சென்றனர்.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான அடித்தளம் வலுப்பெற்று வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், விண்வெளித் துறையில்

மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய திட்டங்களால், இளைஞர்கள் புதிய வாய்ப்புகள் கிடைக்கப்பெற்று பயனடைந்து வருவதாக தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாட்டின் முதலாவது தேசிய விண்வெளி தினம் கொண்டாடப்பட்டதை நினைவுகூர்ந்த பிரதமர், சந்திரயான்-3 வெற்றியின் அடையாளமாக இந்நாள் திகழ்வதாகவும் கூறினார்.

*(சவுண்ட் பைட் - மோடி (1) 32 செகண்ட்ஸ்)*

இந்த ஆண்டு தமது சுதந்திரதின உரையில் ஒரு லட்சம் இளைஞர்கள், அரசியலில் பங்கேற்க வேண்டும் என்று தாம் விடுத்த அழைப்பு, இளைய சமுதாயத்தினரிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாகவும், அதிக அளவில் அரசியலுக்கு வர அவர்கள் தங்களை தயார்படுத்திக் கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அடுத்த சில நாட்களில் பல்வேறு பண்டிகைகளை நாம் கொண்டாடவிருப்பதை குறிப்பிட்ட பிரதமர், மக்களுக்கு தமது வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டார்.

*(சவுண்ட் பைட் - மோடி (2) – 20 செகண்ட்ஸ்)*

பிரதமர் ஆற்றிய உரையின் முழு தமிழாக்கம் இரவு 8 மணிக்கு சென்னை அகில இந்திய வானொலியில் மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>><<<<<

11 லட்சம் புதிய லட்சாதிபதி மகளிர் தொழில் முனைவோருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று சான்றிதழ்களை வழங்கினார்.

மஹாராஷ்ட்ரா மாநிலம், **Jalgeon**–ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் சான்றிதழ்களை வழங்கிய பின், லட்சாதிபதி மகளிர் தொழில் முனைவோருடன் பிரதமர் கலந்துரையாடினார்.

அவர்கள் நடத்தி வரும் தொழில் மற்றும் வர்த்தகம் குறித்து கலந்துரையாடிய பிரதமர், அவர்களின் முன்னேற்றத்திற்கான வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மூன்றாவது முறையாக பதவியேற்ற பின், மேலும் 11 லட்சம் மகளிர் தொழில்முனைவோர் இணைந்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியின்போது, 48 லட்சம் மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் முதலீட்டுக்கான சுழல் நிதியையும் பிரதமர் விடுவித்தார்.

மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்களுக்கு 5 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடனையும் பிரதமர் விடுவித்தார்.

இதனால், 25 லட்சத்து 80 ஆயிரம் உறுப்பினர்கள் பயன்பெறுவார்கள்.

இந்நிகழ்ச்சியில் மஹாராஷ்ட்டிர ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே, மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான், மஹாராஷ்ட்ர மாநில துணை முதலமைச்சர்கள் திரு. தேவேந்திர ஃபட்நாவிஸ், திரு. அஜித் பவார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

34 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 36 ஆயிரத்திற்கு மேற்பட்ட இடங்களிலிருந்து மகளிர் தொழில் முனைவோர் மற்றும் சுயஉதவி குழு உறுப்பினர்கள் காணொலி வாயிலாக பங்கேற்றனர்.

மஹாராஷ்டிரா மாநில பயணத்தை முடித்துக் கொண்டு, ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் புறப்பட்டுச் சென்றுள்ள பிரதமர், அம்மாநிலத்தில் உள்ள உயர்நீதிமன்றத்தின் பவள விழா கொண்டாட்டங்களில் கலந்து கொள்கிறார்.

உயர்நீதிமன்றத்தில் புதிய அருங்காட்சியகத்தையும் பிரதமர் திறந்து வைக்கிறார்.

>>>>><<<<<

பூம்புகார் சுற்றுலா மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகள் இரண்டு மாதங்களில் நிறைவு பெறும் என்று மாநில அமைச்சர் திரு. மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் சுற்றுலா மையத்தில் மரக்கன்றுகள் நடும் விழாவில் பங்கேற்ற அவர், இம்மமையத்தில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகளையும் ஆய்வு செய்தார்.

23 கோடி ரூபாய் செலவில் தற்போது பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்த அவர், 70 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளதாகவும் கூறினார்.

கொள்ளிடம் ஆற்றில் ஏற்படும் வெள்ளப்பெருக்கினால் பாதிப்புக்குள்ளாகும் கிராமப்புற மக்களை தங்க வைக்க, இரண்டு புயல் பாதுகாப்பு மையங்கள் கட்டப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மெய்யநாதன் 38 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

கடற்கரை பகுதிகளை தூய்மையாக பராமரிக்க “நம்ம மெரினா – நம்ம பெருமை” என்ற விழிப்புணர்வு இயக்கத்தினை மாநில அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

அதிநவீன கடற்கரை மோட்டார் வாகனங்கள், நீர் நிலைகளை தூர்வாரும் ரொபோட்டிக் எஸ்கவேட்டர் இயந்திரங்கள், கடற்கரையை தூய்மைப்படுத்தும் இயந்திரங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளை அவர் இயக்கி வைத்தார்.

411 பேருக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளையும் அமைச்சர் வழங்கினார்.

சென்னை மெரினா மற்றும் பெசண்ட் நகர் கடற்கரை மணல் பரப்பை சுத்தம் செய்வதற்காக கொண்டு வரப்பட்டுள்ள இந்த இயந்திரங்கள் துரிதமாகவும், திறம்படவும் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள உதவிகரமாக இருக்கும் என்றும் இன்று வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில் பாலியல் வன்கொடுமை அதிக அளவில் நிகழ்வதாகவும், இதற்கு போதைப்பொருள் அதிக அளவில் புழக்கத்தில் இருப்பதே காரணம் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சேலத்தை அடுத்த ஓமலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் அதிக அளவில் கொலைச் சம்பவங்கள் நிகழ்வதாகவும், இதற்கு போதைப்பொருள் பழக்கமே காரணம் என்றும் தெரிவித்தார்.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாகவும், காவல்துறை மக்களை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

கடந்த அஇஅதிமுக ஆட்சியின் போது, பல்வேறு நலத்திட்டங்கள் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

தென்காசி மாவட்டம், குற்றாலத்தில், முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் மூன்று சக்கர வாகனத்தில் அமர்ந்தவாறு நடனமாடி, சாலை பாதுகாப்பு விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

>>>>><<<<<

விபத்து மற்றும் பாகப்பிரிவினை உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் விரைவாக தீர்ப்புகள் மற்றும் நிவாரணங்கள் கிடைப்பதற்கு நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் ஒத்துழைப்போடு செயல்பட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற முதன்மை செயல் நீதிபதி திரு **D** கிருஷ்ணகுமார் கூறியுள்ளார்.

>>>>><<<<<

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், சிவில் விமான போக்குவரத்துத் துறையின் அனுமதியில்லாமல் ட்ரோன்கள் பறக்கவிடுவோர் மீது வழக்கு பதிவு செய்யப்படும் என ஆட்சியர் திருமதி. சரயு தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு காவிரி ஆற்றுக்கு குளிக்கச் சென்ற இரண்டு சிறுவர்கள், ஆழமான பகுதிக்கு அடித்துச் செல்லப்பட்டதால், நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்காக 20க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர் வீராங்கனைகள் இன்று புறப்பட்டுச் சென்றனர்.

வரும் புதன்கிழமை தொடங்கவிருக்கும் பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இந்தியாவிலிருந்து இதுவரை இல்லாத அளவில் 84 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் 12 விளையாட்டு பிரிவுகளின் கீழ் பங்கேற்கவுள்ளனர்.

டேபிள் டென்னிஸ் வீராங்கனை பவீனா பட்டேல், சோனால்பென் பட்டேல், பேட்மிண்டன் வீரர்கள் மனோஜ் சர்கார், மனிஷா ராம்தாஸ், கிருஷ்ணா நாகர், தடகள வீரர்கள் சச்சின் கிளாரி, சாக்ஷி கஸானா உள்ளிட்டோர் இன்று புறப்பட்டுச் சென்றனர்.

**>>>>><<<<<**

தென்னிந்திய கபடி போட்டி திருவாரூர் மாவட்டம், வடுவூர் புதுக்கோட்டையில் இரண்டாவது நாளாக நடைபெறுகிறது.

இப்போட்டியில், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மாநிலங்களைச் சேர்ந்த முன்னணி கபடி விளையாட்டு வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

**>>>>>END<<<<<**